**செ.வெ.எண்: 25** **நாள்: 18.01.2018**

# ஜுன் 2017தொடக்கக் கல்விபட்டயத் தேர்வெழுதிய ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் மற்றும் தனித்தேர்வர்கள் தேர்வு முடிவு வெளியிடுதல்/மதிப்பெண் சான்றிதழ்கள்அனுப்பிவைத்தல் மற்றும் விடைத்தாட்களின் மறுகூட்டல் (Retotalling) ஒளிநகலைப் (Scan Copy)பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்பது மற்றும் (ஜுன் 2018) தேர்வுக் கால அட்டவணை வெளியிடுதல் குறித்து செய்தி அறிவிக்கை.

ஜுன் 2017–ல் நடைபெற்றதொடக்கக் கல்விபட்டயத் தேர்விற்கு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மூலம் பயிற்சி பெற்று முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு தேர்வெழுதிய மாணவ / மாணவியர்களின் மதிப்பெண் சான்றிதழ்களைஅவரவர் பயின்ற ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் **17.01.2018** முதல் பெற்றுக் கொள்ளலாமெனவும், தனித் தேர்வர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் **17.01.2018** முதல் மதிப்பெண் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டு தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம் எனவும்

மேற்படிமாணவ / மாணவிகளில் விடைத்தாட்களின் ஒளிநகல்பெற / விடைத்தாட்களை மறுகூட்டல் செய்ய விண்ணப்பிக்க விரும்புவோர் **www.dge.tn.gov.in**என்ற இணையதளத்தில் உள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பதிவிறக்கம் செய்து கொண்டு, அதனைப் பூர்த்தி செய்து, அவ்விண்ணப்பத்துடன் அதில் குறிப்பிட்டுள்ள கட்டணத் தொகையை கீழ்க் குறிப்பிட்ட நாட்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் நேரடியாகச் செலுத்தி ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

விடைத்தாளின் ஒளி நகல் பெறப்பட்ட பின்னர் விருப்பமுள்ள தேர்வர்கள் மறுகூட்டல் / மறுமதிப்பீடு செய்ய விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**விடைத்தாள் நகல் வேண்டி விண்ணப்பிப்பவர்கள், ஒருபாடத்திற்கு ரூ.275/– மற்றும் ஆன்–லைன் கட்டணம் ரூ.50/–யும், விடைத்தாளின் மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பவர்கள், ஒருபாடத்திற்கு ரூ.205/– செலுத்த வேண்டும். ஆன்–லைன் கட்டணம் ரூ.50/–தேர்வர் வசிக்கும் மாவட்டத்திற்கு அருகில் அமைந்திருக்கும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம்.**

**விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள் – 22 .01.2018 (திங்கட்கிழமை) முதல் 25.01.2018 (வியாழக்கிழமை) வரை விண்ணப்பிக்க வேண்டிய கடைசிநாள் 25.01.2017 (வியாழக்கிழமை). தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலம், கரூர்.